**கவனிக்க.-** 2016.04.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1964 - 2016 අප්‍රේල් මස 22 වැනි සිකුරාදා - 2016.04.22

1964ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 96 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** வேலையாளர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப்படி சட்டமூலம் 2016, சனவரி 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித அறிவித்தல்கள்

## சிசிர ஜயக்கொடி சியபத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

பத்ம உதயசாந்த குணசேகர ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் இல.48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சிசிர ஜயக்கொடி சியபத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் "என்றழைக்கப்படுகின்ற சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்:-

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) வறிய மாணவர்களுக்கு முன்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையான அவர்களின் கல்விக்கு தேவையான உதவிகள் புலமைப் பரிசில்களை வழங்குதல்;

(ஆ) சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்காக பல்தரப்பட்ட பாடத்திட்டங்கள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல்;

(இ) பல்தரப்பட்ட மத நிலையங்களை தரிசிப்பதற்கு ஆர்வமுள்ள அநாதரவான நபர்களுக்கு தேவையான பயண வசதிகளை செய்து கொடுத்தல்

பிறவும்.

பத்ம உதயசாந்த குணசேகர,
பாராளுமன்ற உறுப்பினர்.

4- 763

---

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் -கொழும்பு (குடியியல் நியாயாதிக்க நடைமுறைப்படுத்தும்)

ஒடுக்கப்படுவதற்கான அறிவித்தல்

கொழும்பு 12, பழைய சோனகத்தெரு, இல. 57 இடத்தின் பல்லியகொட டிரேடிங் கம்பனி (பிறைவெட்) லிமிட்டட் பற்றிய விடயம்; தொடர்பானது

வழக்கு இல. : HC/ (குடியியல்)/ 49/14சீஓ
தன்மை: ஒடுக்குதல் ஒழுங்குமுறைகள்
பெறுமதி:

மற்றும்

பல்லியகொட டிரேடிங் கம்பனி ( பிறைவெட் ) லிமிட்டட்டை ஒடுக்குவதற்கான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 534ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற விண்ணப்பத்துடன் தொடர்பானது;

நெதர்லாந்து பிரீடா மயுரிட்ஸ்டார்ட் 4811 EN, இல் எனர்ஜ் கொமர்ஸ் பீ.வீ.

மனுதாரர்

கொழும்பில் நடாத்தப்படும் ( குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தால் மேற்படி கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று மனுதாரின் சார்பில் திருவாளர் டீ.எல்.அன்ட் எவ்.டீ.சேரம் நிறுவனத்தால் 2014 , நவெம்பர் 10 ஆந் திகதி மேற்படி நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி மனு 2016 செத்தெம்பர் 06 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்கென பணிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ ஆட்சேபிக்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவு தொகை செலுத்துனர் எவரும் விசாரணையின் போது அந்நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணியின் மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துனர் எவருக்கும் அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின் மீது அப்பிரதி கொடுத்துதவப்படும் என்று இத்துடன் அறியத்தருகின்றது.

கையொப்பம் :

திருவாளர்கள் டீ.எல்.அன்ட் எவ்.டீ.சேரம்
சட்டத்தரணிகள்,
இல.47, அலெக்சாந்திரா பிளேஸ்,
கொழும்பு 7.

**குறிப்பு**.- மேற்படி மனு விசாரணை செய்யப்படும் போது நேரில் தோற்ற உத்தேசிக்கும் ஆளெவரும் அவ்வாறு செய்வதற்காக தமது உத்தேசம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை திருவாளர்கள் டீ.எல். அன்ட் எவ்.டீ.சேரம் நிறுவனத்திற்கு சேர்ப்பித்தல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலில் ஆளின் பெயரும், முகவரியும் அல்லது நிறுவனம் எனின் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் சட்டத்தரணியால் ( எவருமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு சேர்க்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் 2016, செத்தெம்பர் 05 ஆந் திகதியன்று பி.ப. 6.00 மணிக்கு பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சல்படுத்தல் வேண்டும்.

வழக்காளியின் சட்டத்தரணி.

4-837